(2) கவன ஈர்ப்பு.

செலக்ஷன் முறையால் பாதிக்கப்பட்ட சேலம் சாரதா கல்லூரி மாணவிகளை பொதுத் தேர்வு எழுத அனுமதிப்பது குறித்து.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ்,

"சேலம் சாரதா கல்லூரி மாணவிகள் இந்தாண்டு பொதுத் தேர்வு எழுத செலக்ஷன் முறையை வைத்து சுமார் 300-க்கும் மேற்பட்ட மாணவிகள் தேர்வு எழுத முடியாமல் பாதிக்கப்பட்டு இருப்பதால் இந்தாண்டு எல்லா மாணவிகளையும் பொதுத் தேர்வு எழுத அனுமதி வழங்க வேண்டும்"

என்னும் அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, திரு. எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ., சேலம் சாரதா கல்லூரி நிர்வாகத்தினர் செலக்ஷன் தேர்வு முறையைப் பின்பற்றுவதன் மூலம் சுமார் 300 மாணவிகள் பல்கலைக் கழகப் பொதுத் தேர்வு எழுத இயலாமல் தடங்கல் ஏற்படுமெனத் தெரிவித்து, மாணவியர் அனைவரும் தேர்வு எழுத அனுமதிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

செலக்ஷன் தேர்வு நடத்தி அதன்மூலம் சில மாணவர்களை இறுதிப் பல்கலைக் கழகத் தேர்வை எழுத விடாமல் செய்வதற்கான உத்தரவு எதையும் அரசு நடத்தும் கல்லூரிகளில் பிறப்பிக்கவில்லை; மானியம் பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரை, இது தொடர்புள்ள பல்கலைக் கழகத்தாலும் அந்தந்தக் கல்லூரிகளாலும் முடிவு செய்ய வேண்டியவொன்றாகும். இப்பொருள் முழுவதும் தொடர்புள்ள பல்கலைக் கழக வரம்பிற்கும், கல்லூரி வரம்பிற்கும் உட்பட்டதாகும். இதில் அரசின் பொறுப்பு ஏதுமில்லை.